C.P.No.5/2019
Date.02.01.2020
Witness: MW 2 Thiru.A.Ashokkumar

சாட்சி மனு உத்தரவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

இந்த வழக்கு விபரங்கள் எனக்கு கோப்பின் அடிப்படையில்தான் தெரியும் என்றால் ஆமாம். 01.11.2009 தேதி முதல் 12.02.2011 வரை மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கீழ்தான் பணிபுரிந்து வந்தார் என்றால் ஆமாம். மேற்படி காலகட்டத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் மனுதாரருக்கு சம்பளம் வழங்கியது என்றால் இல்லை, சம்பளம் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் வழங்கியது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூலம் பத்தி 6ல் January 2011 வரை மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் சம்பளமும், இதர சலுகைகளும் வழங்கியதாக கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு கூறியிருந்தால் அது தவறு. பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப்பார்க்கவில்லையா என்றால் படித்துப்பார்த்துவிட்டுதான் கையொப்பம் செய்தேன். தொழிலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணையில் நான் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் சார்பாக கலந்துகொள்ளவில்லை என்றால் ஆமாம். 01.11.2009 தேதிமுதல் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய சம்பளம், பணிக்கொடை, மற்றும் இதர பணிப்பலன்களை 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் வழங்கிவருகிறது என்றால் 1ம் எதிர்மனுதாரரின் சம்மதத்துடன் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கிவருகிறது. குத்தகை ஒப்பந்தம் பிரிவு 14 மற்றும் 15ல் அவ்வாறு 1ம் எதிர்மனுதாரரின் சம்மதம் தேவை என்று கூறப்படவில்லை என்றால் பிரிவு 16ல் அது கூறப்பட்டுள்ளது. மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்த தொழில்தாவா எண்.76/2011 ல் , 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் வழக்கு நடத்தியதும் அந்த வழக்கில் தீர்வம் பிறப்பிக்கப்பட்டதும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த தீர்வத்தில்

மனுதாரருக்கு மீண்டும் வேலை வழங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். அந்த தீர்வத்தின்மீது 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதா என்றால் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளோம். அந்த மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளது சம்பந்தமாக ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. **I.D.No**.76/2011 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தின்மீது 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றும், மேல்முறையீடு தாக்கல் செய்திருப்பதாக நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் மேல் முறையீடு தாக்கல் செய்திருப்பதாக நான் யூகத்தின் அடிப்படையில்தான் கூறுகிறேன். மேற்படி தீர்வத்தை எதிர்த்து 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 01.11.2009 முதல் 12.02.2011 வரை மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின்கீழ்தான் பணிபுரிந்ததால் அவருக்கு கொடுக்கவேண்டிய சம்பளம் மற்றும் இதர பணப்பலன்களை 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தாக் கொடுக்க வேண்டும் என்றால் அது சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் கேட்டுக்கொண்டதால்தான் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரின் பணி நீக்க உத்தரவில் கையொப்பம் மட்டும் போட்டது என்றும், மனுதாரரின் வேலை நீக்கம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளும் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தையே சேர்ந்தது என்றும் சொன்னால் அது சரியல்ல. ஆகவே, இந்த மனுவை 1ம் எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.